# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.302/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 30 ( PW– 30 )** |
| **பெயர்** | :– | **சம்பத்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை தொடர்ச்சி:-**

எதிரிகள் மேகநாதன், சந்தோஷ் ஆகியோரிடமிருந்து கைப்பற்றிய தடையங்களை 05.12.2014-ஆம் தேதியன்று அதிகாரவரம்புள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் உரிய படிவத்தில் ஒப்படைத்தேன். எதிரி கிருபாகரன், எதிரி சுந்தரமூர்த்தி, எதிரி ஆனந்தன் ஆகியோரிடமிருந்து கைப்பற்றிய இதற்குமுன் சொல்லப்பட்ட தடையங்களையும் இறந்துபோன விஜயன் பயன் படுத்திய இதற்குமுன் சொல்லப்பட்ட இருச் சக்கர வாகனத்தையும் 11.12.2014-ஆம் தேதியன்று உரிய படிவம்மூலம் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். எதிரி அருண்குமார், எதிரி அருண்குமாரின் வீட்டு உரிமையாளர் இரகுமான், எதிரி அருண்குமார் கடன் திருப்பி கொடுத்த செந்தில்நாதன் ஆகியோர் ஒப்படைத்த பணம் உள்ளிட்ட வழக்குச் சொத்துக்களையும் 12.12.2014-ஆம் தேதியன்று உரிய படிவம்மூலம் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். 12.12.2014-ஆம் தேதியன்று சம்பவ இடத்தில் இருந்து நான் மாதிரிக்காக கைப்பற்றிய இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண், விஜயனின் சடலத்தின்மீது இருந்து கைப்பற்றிய பொருட்கள் ஆகியவற்றை சேலம் வட்டார தடவியல் அறிவியல் ஆய்வகத்திற்கு இரசாயன பரிசோதனைக்கு அதிகாரவரம்புள்ள நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் உரிய விண்ணப்பம் கொடுத்து அனுப்பி வைத்தேன்.

விஜயனின் சடலத்தை சடலக்கூராய்வு செய்த சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் கோகுலரமணன் அவர்களை 20.01.2015-ஆம் தேதியன்று சந்தித்து சடலக்கூராய்வு அறிக்கை, இராசயன பரிசோதனை அறிக்கை ஆகியவற்றின்அடிப்படையில் இறுதிக் கருத்துரை பெற்றேன்.

தொடர்ந்து புலனாய்வில் எனக்கு உதவியாக இருந்து பல்வேறு புலனாய்வு ஆவணங்களை கணினியில் பதிவுசெய்து கொடுத்து சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சுப்பிரமணியம், சடலத்தை சடலக்கூராய்விற்கு எடுத்து சென்றது சம்மந்தமான பணிகளை செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் இராஜமாணிக்கம் ஆகிய இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு -செய்தேன்.

05.04.2015-ஆம் தேதியன்று எதிரிகள் சுந்தரமூர்த்தி, கிருபாகரன் ஆகிய இருவரும் பயன்படுத்திய கைப்பேசி எண்களின் தொடர்பு விவரங்களை பெற்றுக் கொடுத்த தலைமை காவலர் ரங்கநாதனை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

10.04.2015-ஆம் தேதியன்று விஜயனுக்கும் எதிரி சுந்தரமூர்த்திக்கும் இடையேயான நிலப்பிரச்சனை சம்மந்தமாக சான்றாளர்கள் சாந்தா, பழனிசாமி, பொன்னுசாமி, ருக்குமணி ஆகியோரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

20.04.2015-ஆம் தேதியன்று சான்றாளர்கள் பெரியசாமி, பழனிவேல் ஆகியோரை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவுசெய்தேன். கொலை செய்யப்பட்ட விஜயனுக்கும் எதிரி சுந்தரமூர்த்திக்கும் இருந்த நிலப்பிரச்சனை சம்மந்தமாக சேலம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் வழக்குப் பதிவுசெய்து விசாரித்த காவல் ஆய்வாளர் சண்முகம் அவர்களை 06.05.2015-ஆம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றே வீரபாண்டி நிருவாக அலுவலர் செல்வம் அவர்களை எதிரி சுந்தரமூர்த்தி, கொலையுண்ட விஜயன் ஆகியோரின் நிலங்கள் அருகில்

இருப்பது குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். தொடர்ந்து எதிரி கிருபாகரன் விஜயனை கொலை செய்ய எதிரி சுந்தரமூர்த்தியிடம் பெற்ற கூலிபணத்தில் வாங்கிய பதிவு எண் TN 54 J 8555 கொண்ட இருச் சக்கர வாகனத்தின் விவரத்தை சேலம் கிழக்கு மண்டல வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து பெற்றேன். சேலம், வீரபாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் எதிரி சுந்தரமூர்த்திக்கு நல்லம்மாள், பொன்னுசாமி ஆகியோர்கள் நிறைவேற்றிக் கொடுத்த அறுதியாவணத்தின் சான்றிட்ட நகலைப் பெற்றேன்.

முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த காவல் உதவி ஆய்வாளர் மணிவண்ணன் அவர்களை 13.05.2015-ஆம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். தொடர்ந்து சேலம் 04-ஆம் நீதித்துறை குற்றவியல் நீதிமன்றம் தலைமை எழுத்தர் மகாலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். என் புலனாய்வை முடித்து எதிரிகள்மீது இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 120B, 147, 148, 149, 341, 302 ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை சுமத்தி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

சான்றாளர்கள் செல்வராஜ், கனகா, மாதவி, செல்வராணி, பழனிவேல், காவேரி, கந்தசாமி, பிரகாஷ், மகாதேவன், முகமது ஹஜீ, குமார், செந்தில்நாதன், சாந்தா, பழனிசாமி ஆகியோர் புலனாய்வின்போது அரசு தரப்பு வழக்கை வலியுறுத்தி கூறிவிட்டு சாட்சியம் அளித்தபோது பிறழ் சான்றாளர்களாக மாறிவிட்டனர்.

**01–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

02.09.2014-ஆம் தேதியன்று ஆட்டையாம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 317/2014 வழக்கு பற்றி அந்த காவல் நிலையத்தின் உதவி காவல் ஆய்வாளர் மணிவண்ணன் மூலம் எனக்கு தெரியவந்தது என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

அரியானூர் பேக்காடு பகுதியில் இரத்த காயங்களுடன் ஓர் ஆண் சடலம் கிடப்பதாக தொலைப்பேசி மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் சரியல்ல. அவ்வாறு தகவல் கிடைத்தது என்றும் அத்தகவலின்பேரில் நானும் என் காவல் நிலையத்தை சேர்ந்தவர்களும் அந்த இடத்திற்கு சென்றோம் என்றால் சரியல்ல.

நான் சம்பவ இடத்தை ஆய்வு செய்தபோது அந்த நேரத்தில் அந்த இடத்தில் எனக்கு இறப்பு சம்மந்தமான எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார் கொடுப்பதற்குமுன் நான் சடலம் கிடந்த இடத்திற்கு சென்றபோது சான்றாளர் கலாவதி அங்கு வந்தார் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. கலாவதிதான் புகார் கொடுத்தார். அதன்பிறகு நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது கலாவதி இருந்தார். நான் சொல்வது தவறு என்றும் சம்பவ இடத்தில் இருந்து கலாவதை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று புகார் எதுவும் வாங்கினேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தபின் மீண்டும் கலாவதியை அங்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் மகசரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல தலைமை காவலர் எழுதினார். அந்த தலைமை காவலரின்

கையொப்பம் அதில் இல்லை என்றால் சரிதான். சடலம் கிடந்த இடத்தில் சான்றாளர்கள் கலாவதி, பழனிவேலு, செல்வராஜ், கனகா, மாணிக்கவாசகம் ஆகியோரை நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

02.09.2014-ஆம் தேதியன்று தயாரிக்கப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை 12.09.2014-ஆம் தேதியன்று நீதித்துறை குற்றவியல் நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிரேத விசாரணை சான்றாளர்களின் வாக்குமூலங்களும் 12.09.2014-ஆம் தேதியன்றுதான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணையில் 09-ஆம் பத்தியில் விஜயன் 60 வயதாகி திருமணம் செய்து கொள்ளாததால் கல்லதொடர்பு காரணமாகவோ விஜயனுக்கும் அவரது அண்ணன் தங்கைகளுக்கும் நிலப்பிரச்சனை இருந்துவந்த காரணத்தினாலோ விஜயன் கொல்லப்பட்டு இருக்கலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். விஜயனுக்கும் அவரது பங்காளிகளுக்கும் இடையே நில அபகரிப்பு பிரிவில் வழக்கு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

பிரேத விசாரணைக்குபிறகு விஜயனுக்கும் வேறு யாருக்கும் கல்லதொடர்பு இருந்ததா என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். குறிப்பிட்டு எதுவும் புலப்படவில்லை. யாரை விசாரித்தேன் என்று குறிப்பாக சொல்லமுடியுமா எனறால் சொல்லமுடியாது. பிரேத விசாரணையில் சான்றாளர்கள் யாரும் நில அபகரிப்பு பிரிவில் வழக்கு இருப்பது சம்மந்தமாக சொல்லவில்லை என்றால் சரிதான். பாகம் பிரியாத நிலங்களை 1,00,000/-உரூபாய்க்கு விற்பதற்கு விஜயனின் அண்ணன் நடராஜன் என்பவர் விற்பனைக்கான ஒப்பந்தம் செய்திருந்தார் என்பது

குறித்து விசாரித்தேனா என்றால் இல்லை. சான்றாளர்கள் கலாவதி, பழனிவேல் ஆகியோரின் 02.09.2014-ஆம் தேதியிட்ட வாக்குமூலங்கள் கைகளால் எழுதப்பட்டுள்ளன என்றால் சரிதான். அதை நான் கைப்பட எழுதவில்லை. நான் சொல்ல தலைமை காவலர் எழுதினார். அவருடைய கையொப்பம் அதில் இல்லை என்றால் சரிதான். அவருடைய பெயர் எனக்கு தற்போது நினைவில்லை.

16.11.2014-ஆம் தேதியன்று கலாவதி, பழனிவேல் ஆகியோரை மறு விசாரணை செய்தேன் என்றால் சரிதான். அதை தட்டச்சு செய்தவர் யார் என்று குறிப்போ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். இந்திரா நகர் கணபதி மனைவி கனகா என்பவரை நான் முதன்முதலில் 02.09.2014-ஆம் தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையின் 04-வது பத்தியில் 01.09.2014-ஆம் தேதியன்று இரவு சுமார் 09.00 மணிக்கு விஜயன் தனியாக வந்ததை கனகா கடைசியாக பார்த்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணையில் வேறு சான்றாளர்கள் யாரும் விஜயனை கனகா கடைசியாக பார்த்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையை யார் எழுதியது என்றால் நான் சொல்ல தலைமை காவல் எழுதினார். அதில் தலைமை காவலரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

சான்றாளர் செல்வராஜ் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் அவரை ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் பிரேத விசாரணை சான்றாளராக உள்ளார் என்றால் சரிதான். சடலம் கிடந்த இடத்தில் சான்றாளர்களை

விசாரித்தாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 19.11.2010-ஆம் தேதியன்று கலாவதி விஜயன் பெயருக்கு அறுதியாவணம் எழுதியது குறித்து 16.11.2014-ஆம் தேதியன்று கலாவதி சொன்ன வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதே 5.34 ஏக்கர் நிலத்தை தன் தகப்பனார் மற்றொரு மகன் நடராஜன் பெயருக்கு 11.11.2011-ஆம் தேதியன்று அறுதியாவணம் எழுதிக் கொடுத்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த நிலத்தை விற்க நடராஜனும் அவரது மகள் இந்துமதியும் விற்க ஒப்பந்தம் போட்டுக்கொண்ட விவரம் புலனாய்வில் தெரியவில்லை.

சம்பவ இடத்தில் பிரேத விசாரணை நடத்தி கலாவதி, நடராஜன் ஆகியோரை விசாரித்தபின் சடலக்கூராய்விற்காக சடலத்தை அனுப்பி வைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சான்றாளர் பழனிவேல் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே நான் சடலத்தை கூராய்வு செய்வதற்கு அனுப்பி வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பிரேத விசாரணை செய்தது சம்மந்தமாகவும் அந்த இடத்தில் சான்றாளர் -களை விசாரித்தது சம்மந்தமாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் பொய் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை நடத்தியபோது இறப்பிற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரிய வராமலே சடலக்கூராய்விற்கு அனுப்பி வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிரேத விசாரணையில் கலாவதி, பழனிவேலு ஆகிய இருவரையும் நான் விசாரிக்கவில்லை என்றும் அதன்பிறகும் அந்த இடத்தில் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

விஜயனை யார் கொலை செய்தது என்று என்னால் கண்டுப்பிடிக்க முடியவில்லை என்றும் மேல் அதிகாரியின் அழுத்தத்தின் காரணமாக இந்த வழக்கை பொய்யாக புனைந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நில அபகரிப்பு சம்மந்தமாக 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தி இறந்துபோன விஜயன், அவருடைய சகோதரி ஆகியோர்மீது புகார் கொடுத்தார் என்றும் அந்த வழக்கில் விஜயன் கைது செய்யப்பட்டு பிறகு பிணையில் விடுவிக்கப் -பட்டார் என்றும் சொன்னால் சரிதான். அதுச் சம்மந்தமாக உயர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு நடவடிக்கையில் 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தி, விஜயன் ஆகியோர் சமாதானமாகிவிட்டதால் அந்த வழக்கு நசித்திடப் -பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது.

சுந்தரமூர்த்தியை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி பலமுறை காவலர்களை அவருடைய வீட்டிற்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு காவலர்கள் சென்றனர் என்றும் காவல் நிலையத்திற்கு வர -வில்லை என்றால் கைது செய்வோம் என்று மிரட்டிவிட்டு வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அவர்மீது பொய் வழக்கு பதிவுசெய்து துன்புறுத்துவோம் என்ற காரணத்தினால்தான் அவர் 11.11.2014-ஆம் தேதியன்று பரமத்தி நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்றால் சரணடைந்து உண்மை. மற்ற சங்கதி பொய்.

எதிரி சுந்தரமூர்த்தியை காவல் துறை காவல் வைப்பில் எடுக்க நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுமீது எதிரி சுந்தரமூர்த்தி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதன்பேரில் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால்

சரிதான். அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில் அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். 27.11.2014-ஆம் தேதி -யன்று எதிரி சுந்தரமூர்த்தியை ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சென்றபோது மாலை 04.15 மணி இருக்கும் என்றால் இருக்கலாம். ஆட்டையாம்பட்டி கிராம நிருவாக அலுவலகம் காவல் நிலையத்திற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். கிராம நிருவாக அலுவலரை அப்போதே வரவழைத்து எதிரியை விசாரிக்க முற்படவில்லை என்றால் சரியல்ல. கிராம நிருவாக அலுவலரை வரவழைக்க கடிதம் கொடுத்ததற்கு நகல் உள்ளதா என்றால் உள்ளது.

28.11.2014-ஆம் தேதியன்று காலை 06.00 மணிக்கு கிராம நிருவாக அலுவலரை வரவழைத்தேன் என்றால் சரிதான். நான் அனுப்பிய கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கு கிராம நிருவாக அலுவலர் ஒப்புகை செய்துள்ளார். அந்த கடிதத்தை நான் இந்த வழக்கில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். கிராம நிருவாக அலுவலர் வருவதற்குமுன் நான் ஒப்புதல் வாக்குமூலத்தை தயார்செய்து வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

எதிரி சுந்தரமூர்த்தியின் ஒப்புதலுரை என்ற ஆவணம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்புதலுரை 06 பக்கம் உள்ளது என்றால் சரிதான். அதன் ஒவ்வொரு பக்கத்திலும் சுந்தரமூர்த்தியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 06-ஆம் பக்கத்தில் கடைசியில் கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். சான்றாளர்களும் 06-ஆம் பக்கத்தில்தான் கையொப்பம் இட்டுள்ளனர் என்றால் சரிதான். 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தி நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன

சான்றாளர்கள்முன் ஒப்புதலுரை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஒப்புதலுரையில் எதிரி சுந்தரமூர்த்தி யிடமும் சான்றாளர்களிடமும் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. 01-ஆம் எதிரி சுந்தரமூர்த்தி என்னுடைய பொறுப்பில் இருந்தபோது ஒப்புதலுரை அளித்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் முதல்நாள் தயாரித்த ஒப்புதலுரையில் மறுநாள் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. ஒப்புதலுரை பதிவுசெய்யப்பட்ட நேரம் காலை 06.00 மணிமுதல் என்று உள்ளது என்றால் சரிதான். ஒப்புதலுரையில் கிராம நிருவாக அலுவலர் கண்ணன் அலுவலக முத்திரை பதித்துள்ளார் என்றால் சரிதான்.

அரியானூர் முதன்மை சாலையில் இருந்து பேக்காடு 500 மீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். சுந்தரமூர்த்தின் ஒப்புதலுரை என்று சொல்லப்படும் ஆவணத்தில் "என்னை ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தினர் அழைத்துச் சென்று கொலைப்பற்றி என்னிடமும் என் அப்பாவிடம் விசாரித்தாகவும் விஜயன் கொலைப்பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னதால் எங்களை அனுப்பி வைத்தனர்" என்றும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

வீரபாண்டி கிராம நிருவாக அலுவலர் செல்வத்தை மீண்டும் எதற்காக 28.11.2014-ஆம் தேதியன்று காலை வரச்சொன்னேன் என்றால் எதிரி சுந்தரமூர்த்தியின் வீடு வீரபாண்டி கிராம நிருவாக எல்லைக்குள் இருந்ததால் கைப் -பற்றுதல் மகசர் தயாரிக்க அவரை வரச்சொன்னேன். முதல்நாள் மாலையே அவருக்கு தகவல் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரி சுந்தரமூர்த்தி ஒப்புதலுரை சொல்லுவார் என்று முதன்நாளே எனக்கு எப்படி

தெரியும் என்றால் சம்பவ இடம் வீரபாண்டி எல்லையில் இருந்ததால் வரச் சொன்னேன்.

ஒப்புதலுரை எப்போது பதிவுசெய்து முடிக்கப்பட்டது என்றால் காலை 08.00 மணிக்கு. எதிரி சுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு நான் சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 10.00 மணி இருக்கும். எதிரி சுந்தரமூர்த்தி வீடு இருக்கும் இடத்தில் வைத்து நான் எத்தனை மகசர் தயாரித்தேன் என்றால் 03 கைப்பற்றுதல் மகசர்கள் தயாரித்தேன். அவற்றை யார் எழுதியது என்றால் என்னுடன் வந்த தலைமை காவலர் எழுதினார். அவை மூன்றும் அங்கு வைத்தே ஒரே நேரத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான். கத்தியும் இரத்த கறை படிந்த சட்டையும் அவரது வீட்டின் முன்பக்க கூரையின் அடிப்பகுதியில் சொருகி வைக்கப்பட்டு இருந்து எடுக்கப்பட்டது. அங்கு இருந்து கைப்பற்றப்பட்டது எதிரியின் சட்டை என்று காட்ட என்ன ஆதாரம் என்றால் அவருடைய வீட்டில் இருந்து எடுக்கப்பட்டதாலும் அவருடைய ஒப்புதலுரையில் சொல்லியுள்ளதாலும் அவருடையது என்று -தான் சொல்லமுடியும்.

பதிவு எண் TN 30 AR 7725 கொண்ட இருச் சக்கர வாகனத்தை சம்பவத்தின்போது எதிரி சுந்தரமூர்த்தி பயன்படுத்தினார் என்று எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அவரது ஒப்புதலுரையில் சொல்லி -யுள்ளார். எதிரி சுந்தரமூர்த்தி அவரது வீட்டின் எந்த இடத்தில் இருந்து எதிலிருந்து இரு கைப்பேசிகளை எடுத்துக் கொடுத்தார் என்று மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பாக இல்லை. வீட்டில் இருந்து எடுத்துக் கொடுத்தார். மேற்சொன்ன இருச் சக்கர வாகனம் வீட்டிற்கு வெளியே இருந்த கொட்டகையில் இருந்து எடுத்துக் கொடுத்தார். 03

கைப்பற்றுதல் மகசர்களையும் ஓர் ஆள்தான் எழுதினாரா என்றால் இல்லை. எந்ததெந்த மகசரை யார் யார் எழுதியது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் எனக்கு தற்போது நினைவில்லை.

23.11.2014-ஆம் தேதியன்று ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து இரு காவலர்கள் எதிரி சுந்தரமூர்த்தியின் வீட்டிற்கு என் ஆணையின்பேரில் சென்று சுந்தரமூர்த்தியின் மனைவி விஜயா, தகப்பனார் பூசாவதி கவுண்டர் ஆகிய இருவரையும் மிரட்டி வெளியே அமரச் சொல்லிவிட்டு வீட்டிற்குள் நுழைந்து எதையோ எடுத்துக் கொண்டும் வெளியில் இருந்த இருச் சக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டும் சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பொருட்களை வைத்துதான் 28.11.2014-ஆம் தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து மகசர்களை பொய்யாக புனைந்தோம் என்றால் சரியல்ல.

சுந்தரமூர்த்தியின் வீட்டில் காலை 10.00 மணியிலிருந்து பகல் 02.00 மணிவரை இருந்தோம். அங்கு நான் தயாரித்த மகசர்களில் பொது மக்கள் யாரிடமாவது சான்றொப்பம் வாங்கினேனா என்றால் இல்லை.

23.11.2014-ஆம் தேதியன்று எதிரி சுந்தரமூர்த்தியின் மனைவி விஜயா ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து வந்த காவலர்கள் வீட்டினுள் நுழைந்து ஏதோ பொருட்களையும் வெளியில் இருந்த இருச் சக்கர வாகனத்தையும் எடுத்துக்கொண்டு சென்றார்கள் என்று சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், DIG, DGP ஆகியோருக்கு புகார் அனுப்பினார் என்றும் சொன்னால் அது எனக்குத் தெரியாது. சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாரா என்றால்

இல்லை. என்னை விசாரித்தார் என்றும் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

புலனாய்வு சம்மந்தமான ஆவணங்கள் யாவும் பின்னிட்டு என்னால் தயாரிக்கப்பட்டதால்தான் மிகவும் காலதாமத்துடன் அவை அதிகாரவரம் -புள்ள நீத்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டன என்றால் சரியல்ல. எதிரி சுந்தரமூர்த்தியிடமிருந்து நான் சொன்ன முறையில் சொன்ன நாளில் சொன்ன இடத்தில் எவ்வித பொருளும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல. விஜயன் இறந்ததற்கும் எதிரி சுந்தரமூர்த்திக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**03 முதல் 06 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பழனிசாமியின் தென்னந்தோப்பில் பல்வேறு கால்தடங்கள் இருந்தது என்று பார்வை மகசரில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. இருச் சக்கர வாகனங்களின் சக்கர பதிவு இருந்ததாகவும் குறிப்பு இல்லை என்றால் சரிதான். கைரேகை நிபுனரோ மோப்ப நாய் பிரிவினரோ அல்லது வேறு வல்லுநர்களோ நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது வந்திருந்தனரா என்றால் மோப்ப நாய் பிரிவு, தடய அறிவியல் அலுவலர், காவல் துறை நிழற்பட பிரிவினர் ஆகியோர் வந்து இருந்தனர். அதுச் சம்மந்தமான அறிக்கைகள் எதையும் காவல் அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கைகள் யாவும் எதிரிகளுக்கு சாதகமாக இருந்ததால் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

விஜயனின் சடலம் சடலக்கூராய்விற்காக சேலம் அரசு மருத்துவ -மனைக்கு அன்று மாலை 03.35 மணிக்கு கொண்டு செல்லப்பட்டது

என்றால் சரிதான். சடலக்கூராய்வு அறிக்கையில் மருத்துவர் அன்று 03.10 மணிக்கு விஜயனின் சடலத்தை பார்த்ததாகவும் 03.15 மணிக்கு சடலக் கூராய்வு செய்ய தொடங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரேத விசாரணை அறிக்கையில் விஜயனின் சடலத்தில் காணப் -பட்டதாக குறிப்பிட்டப்பட்ட காயங்களும் சலடக்கூராய்வு அறிக்கையில் விஜயனின் சடலத்தில் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள காயங்களும் வேறுப்பட்டு இருக்கின்றன என்றும் சடலக்கூராய்வு அறிக்கை இந்த வழக்கிற்கு சாதகமாக பெறப்பட்டு இருக்கிறது என்றும் சொன்னால் சரியல்ல.

02-ஆம் எதிரி கிருபாகரன் நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் அவர் அளித்ததாக நான் சொல்லும் ஒப்புதலுரை பின்னிட்டு புனைப்பட்டது என்றும் அவர் வழக்குச் சொத்தை எதையும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றும் வழக்குச் சொத்தும் மகசரும் புனையப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

சடலக்கூராய்வு செய்யப்பட்டபோது விஜயனின் இரத்தம் எடுக்கப் -பட்டு வழக்குச் சொத்துக்களில் தெளிக்கப்பட்டு பின்னிட்டு அவை கைப்பற்றப்பட்டது போன்று தயாரித்து சோதனைக்கு அனுப்பினோம் என்றால் சரியல்ல. 05-ஆம் எதிரி அருண்குமாரை நான் சட்ட விரோதமாக கைதுசெய்து காவல் நிலையத்தில் வைத்து துன்புறுத்தினேன் என்றும் அதே பகுதியை சேர்ந்த 02, 03, 04 ஆகிய எதிரிகள் தங்களையும் அவ்வாறு

செய்வார்கள் என்று நினைத்து நீதிமன்றத்தில் சரணடைந்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. அவர்களின் குடும்ப உறுப்பினர்களை நான் தொந்தரவு செய்ததால் அவர்கள் சரணடைந்தனர் என்றால் சரியல்ல.

03-ஆம் எதிரி மேகநாதன் நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் என்னிடம் ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் அவர் வழக்குச் சொத்து எதையும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றும் அவரது ஒப்புதலுரை -யும் கைப்பற்றுதல் மகசரும் வழக்குச் சொத்தும் புனையப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேகநாதன் சட்டையை எடுத்துக் கொடுத்தார் என்று நான் சொல்லும் வீட்டில் இருந்தவர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். மேகநாதன் எடுத்துக் கொடுத்ததாக சொல்லும் சட்டையில் இரத்த கறை எதுவும் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

04-ஆம் எதிரி சந்தோஷ் என்கிற சந்தோஷ்குமார் நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் என்னிடம் ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் அவர் வழக்குச் சொத்து எதையும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றும் அவரது ஒப்புதலுரையும் கைப்பற்றுதல் மகசரும் வழக்குச் சொத்தும் புனையப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சந்தோஷ் அவரது Jeans pant எடுத்துக் கொடுத்தார் என்று நான் சொல்லும் வீட்டில் இருந்தவர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். Jeans pant ல் இரத்த கறை எதுவும் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். அவரது வீட்டில் இருந்து இருச் சக்கர வாகனம் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரியல்ல.

06-ஆம் எதிரி ஆனந்தனை சேலம் சங்கீத் திரையரங்கம் இருக்கும் இடத்தில் வைத்து கைதுசெய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். அவர் சொன்னதாக நான் சொல்லும் ஒப்புதலுரையில் தனிநபர்கள் யாரும் சான்றொப்பம் இடவில்லை என்றால் சரிதான். 06-ஆம் எதிரியை நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் என்னிடம் ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் அவர் வழக்குச் சொத்து எதையும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றும் அவரது ஒப்புதலுரையும் கைப்பற்றுதல் மகசரும் வழக்குச் சொத்தும் புனையப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அவர் எடுத்துக் கொடுத்ததாக சொல்லும் ஆடைகளில் இரத்த கறை எதுவும் இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். 06-ஆம் எதிரி ஆனந்தன் சான்றாளர் குமாரையோ செந்தில்நாதனையோ அடையாளம் காட்டவில்லை என்றும் அவர்கள் பணம் எதையும் எடுத்துக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 06-ஆம் எதிரியிடமிருந்து நான் கைப்பற்றியதாக சொல்லும் கைப்பேசிகளை தடய அறிவியல் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

வழக்குச் சொத்துக்கள் எங்கெங்கு கைப்பற்றப்பட்டன என்று நான் சொன்னேனோ அந்த இடத்தில் வைத்து அவை மூடி முத்திரை இடப் -பட்டதாக சான்றாளர்கள் யாரும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பேசி எண்களின் அழைப்பு போக்குவரத்து சம்மந்தமாக வாங்கப்பட்ட அறிக்கைகளுக்கு சாட்சிய சட்டத்தின்படியான சான்றிதழ் பெறவில்லை என்றால் சரிதான்.

02.09.2014-ஆம் தேதியன்று மாணிக்கவாசகம், கொப்பத்தான் ஆகிய இருவரும் சடலம் கிடந்த இடத்தின் பார்வை மகசர் சான்றாளர்கள் என்றால் சரிதான். 05-ஆம் எதிரி 15.11.2014-ஆம் தேதியன்று கிராம நிருவாக அலுவலர் செல்வத்திடம் சரணடைந்து வாக்குமூலம் கொடுத்ததாக உள்ள வாக்குமூலத்தின் கொப்பத்தானின் சான்றொப்பம் உள்ளது என்றால் சரிதான்.

ஆட்டையாம்பட்டி பிரிவு சாலைக்கு அருகில் பல கல்லூரிகள் உள்ளன என்றால் சற்று தள்ளி உள்ளன. ஆட்டையாம்பட்டி பிரிவு சாலை பரப் -பரப்புடன் இருக்கும் பகுதி என்றால் சரிதான். அங்கு காவலர்கள் போக்கு -வரத்தை சரிசெய்ய இருப்பார்கள் என்றால் சரிதான். வீரபாண்டி கிராம நிருவாக அலுவலகத்திற்கு ஆட்டையாம்பட்டி பிரிவு சாலையில் இறங்கி உள்ளே செல்ல வேண்டும் என்றால் சரிதான். செல்வமும் கொப்பத்தானும் எங்கள் காவல் நிலையம் சம்மந்தப்பட்ட வேறு வழக்குகளில் ஒப்புதலுரை சான்றாளராக இருந்துள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் பகுதியில் நடக்கும் சம்பவங்களுக்கு மட்டும் இருப்பார்கள். ஆட்டையாம்பட்டி பிரிவு சாலையில் பல கண்காணிப்பு காணொளி சாதனங்கள் உள்ளன என்றால் அந்தந்த கடைக்காரர்கள் வைத்திருப்பார்கள். நான் அந்த கண்காணிப்பு காணொளி பதிவுகளை பார்த்தேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே 05-ஆம் எதிரியை காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்ததால்தான் அவற்றை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

05-ஆம் எதிரி அருண்குமார் கிராம நிருவாக அலுவலரிடம் கொடுத்ததாக நான் சொல்லும் ஒப்புதலுரை 04 பக்கங்கள் உடையது என்றால் சரிதான். ஒவ்வொரு பக்கத்திலும் எதிரியின் கையொப்பம்

உள்ளதா என்றால் இல்லை. கடைசி பக்கத்தில் உள்ளது. கிராம நிருவாக அலுவலரின் கையொப்பத்திற்குகீழ் முத்திரை இல்லை என்றால் சரிதான்.

கிராம நிருவாக அலுவலரின் தனி அறிக்கை காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் சரியல்ல. கிராம நிருவாக அலுவலகத்திற்கு அருகில் இருந்த நபர்கள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கிராம நிருவாக அலுவலகத்திற்கு அருகில் பணியில் இருந்த காவலர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

05-ஆம் எதிரியின் பெற்றோர்கள் அவரது மகனை சட்ட விரோத காவலில் வைத்திருப்பதாக காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை. அவரை முறையாக கைதுசெய்ததாக காட்ட கிராம நிருவாக அலுவலர் மூலம் அவரிடம் எதிரி ஒப்புதலுரை அளித்ததாக ஆவணங்கள் புனையப்பட்டன என்றால் சரியல்ல. 05-ஆம் எதிரி காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் எதையும் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 05-ஆம் எதிரி ரகுமான் என்பவரை காட்டியதாகவும் அவர் 3,000/- உரூபாயை எடுத்துக் கொடுத்ததாகவும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வாடகை இரசீது பொய்யாக புனையப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்துப் புனையப்பட்டன என்றால் சரியல்ல. சான்றாளர் செல்வம் முதல்விசாரணையில் சொல்லியுள்ள வாக்குமூலத் -திற்கும் புலனாய்வின் சொல்லியுள்ள வாக்குமூலத்திற்கும் பல முரண்

-பாடுகள் உள்ளன என்றும் புலனாய்வின்போது சொல்லாத பல சங்கதிகளை முதல்விசாரணையில் சொல்லியுள்ளார் என்றும் உண்மையில் நான் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்திருந்தால் அத்தகைய முரண்பாடுகள் எழுந்திருக்காது என்றும் சொன்னால் சரியல்ல.

01-ஆம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 03 முதல் 06 எதிரிகளில் ஒருவருக்கு ஒருவர் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சான்றாளர் செல்வம், கண்னன், சேகர் ஆகியோரின் வாக்குமூலங்கள் 26.03.2015-ஆம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். விஜயனின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக இந்த வழக்கை புலனாய்வு செய்யாமல் எதிரிகள்மீது தவறுதலாக குற்றம் சுமத்தி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சான்றாளர்கள் யாரையும் விசாரிக்க -வில்லை என்றும் வாக்குமூலங்கள் அனைத்தும் பின்னிட்டு புனையப் -பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.